முருகப்பெருமான் துணை

**மகான் மங்கையர்கரசியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.01.2022, வெள்ளிக்கிழமை

1. வரம்தரும் அரங்க மகானே
வாழும் ஞானியே வள்ளலே
அறம் கொண்டே மக்களை தேற்ற
அவதாரம் புரிந்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் பிலவ சிலை திங்கள்
வரங்களாக இருபான்சூலதிகதி புகர்வாரம்
(பிலவ வருடம் மார்கழி மாதம் 23ம் நாள், 07.01.2022 வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை மங்கையர்கரசியார் யானும்
அகிலமே பாதுகாப்புப் பெற உரைப்பேன்
ஆசிதந்து மக்களை காப்பேனென
அரங்கமகான் காட்டும் தரும வழியை
4. தருமவழியை கலியுக மக்கள்
தனிப்பெருஞ் சக்தியாக ஏற்று
வருமுலகில் சேவையாகச் செய்து
வணங்கிவர மாற்றம் காணும்
5. காணவே நமனையும் வெல்லும்
கந்தமகா சக்தி பலம்
ஞானமாகத் தேசிகன் வழிவந்து
நம்பகமும் தேற்றமும் கூடும்
6. கூடவே குருவருள் அருளாக
குறைவிலா அறமாக வர
இடர்கள் என்பது இல்லா வண்ணம்
எக்கணமும் பாதுகாப்புப் பெருகும்
7. பெருகவே கலிகாலத் துன்பமான
பேரிடர்கள் பிரளயமே விலகும்
முருகப்பெருமான் திருவடிகள் போற்றியென
முழங்கி செபதப பூசை பலன் கூட்ட
8. கூட்டவே பிரணவ சக்தியெனும்
குறைவின்றி குருபரன் அருள்
கட்டமில்லா காத்து அருளும்
கட்டாயம் மேன்மை தந்தருளும்
9. அருளவே ஆக்க சக்தியான
அரங்கமகான் உபதேசம்
அருளாக பாதுகாப்பு வேலியாக
ஆற்றலாக உலகினில் வலம்வர

10. வருகின்ற ஞானமார்க்கம் தனை
வையகத்தார் ஏற்று நன்கு
தருமம் தனை செய்துகொண்டு
தட்டாது தொடர்ந்து வருகவே
11. வருகவே ஞானவான்களெனும்
வல்லமையான நிலைகள் கூடி
முருகப்பெருமான் தலைமை கொண்ட
முழுமையான ஞான ஆட்சியாக மாறும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–